THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR

**M.C.O.P.No. 55/2016**

Deposition of PW.3 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OP Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on **07.02.2024**

**Evidence Recorded Time: 03.35.P.M. to 03.55 P.M**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **செந்தில்குமார்** | **Caste** | : | |
| **S/o & W/o.** | : | **மாரிமுத்து** | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

விபத்து சமயத்தில் டாடா ஏசி வண்டியை பிரகாஷ்தான் ஓட்டினார் என்றால் சரிதான். சம்பவத்தின்போது நான் வண்டியில் பயணம் செய்யவில்லை என்பதால் விபத்து எப்படி நடந்தது என்றும், வாகனத்தில் எத்தனை பேர் பயணம் செய்தார்கள் என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். ஓட்டுநர் பிரகாஷ் சொல்லிதான் எனக்கு தெரியும். மனுதாரர் லட்சுமணன் எங்கள் வண்டியை வாடகைக்கு எடுத்து செல்லும்போது சம்பவ இடத்தில் நான் இல்லை, நான் வீட்டில் இருந்தேன். காப்பீட்டு நிறுவனத்திற்கு யார் யார் போனார்கள், என்ன லோடு, எவ்வாறு ஏற்றப்பட்டிருந்தது என்ற விபரத்தை எழுத்து மூலம் தெரிவிக்காமல் போனதற்கு ஏதாவது காரணம் இருக்கிறாதா என்றால் நான் ஏற்கனவே தகவல் சொல்லிவிட்டேன். பொதுவாக மாங்கா லோடை ஏற்றியபிறகு வண்டியுடன் எவ்வளவு எடை உள்ளது என்று வே பிரிட்ஜில் எடை பார்க்கப்படும் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அதேபோல் வண்டியில் மொத்த எடையை கழித்து பார்த்தால் எவ்வளவு லோடு ஏற்றப்பட்டிருக்கும் என்ற விபரம் தெரியும் என்றால் சரிதான். சம்பவத்தன்று எவ்வளவு லோடு ஏற்றப்பட்டிருந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் 450

கிலோ ஏற்றப்பட்டிருந்தது என்று டிரைவர் சொல்லி எனக்கு தெரியும். சம்பவத்தின் போது எத்தனை காலி டிரேக்கள் இருந்தது என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது. சம்பவத்தின் போது எந்த இடத்திலிருந்து எந்த இடத்திற்கு மாங்கா லோடு ஏற்றி சென்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் ஜலகண்டபுரம் அருகே தோட்டத்திலிருந்து தருமபுரி மாங்கூழ் ஆலைக்கு கொண்டு சென்றார்கள். மாங்கா எடை எவ்வளவு இருந்தது என்பது பற்றி ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். காப்பீடு நிறுவனத்திற்கு ஒரு லெட்டர் வழங்கியுள்ளேன் என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை –** வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/– PW 3 Senthilkumar

Sd/–S.Muthuraman
Sub Judge, Mettur.